தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 068 /ந/2023
நாள் 04.05.2023

திரு. J. எபிசேயூஸ்,
திருச்செந்தூர்,
தூத்துக்குடி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
திருச்செந்தூர் நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், தெற்கு புதுத் தெரு, கதவு எண். 112B என்ற முகவரியில் வசிக்கும் திரு. J. எபிசேயூஸ் என்பவரின் 21.03.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.03.2023 அன்று பெறப்பட்டு 068/ந/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

<u>ஆணை</u>

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர், தெற்கு புதுத் தெரு, கதவு எண். 112B என்ற முகவரியில் வசிக்கும் திரு. J. எபிசேயூஸ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"திருச்செந்தூர் பேருந்து நிலையம் அருகே உள்ள நகராட்சிக்குட்பட்ட வணிக வளாக கடைகள் ஏல ஒப்பந்தம் கடந்த 2018 ஆம் ஆண்டுடன் முடிவடைந்துள்ளது. தற்போது நகராட்சியான பின்பும் கடைகள் ஏலம் விடப்படாமல் உள்ளது. தற்போது உள்ள கடைகளில் திரு. இராமகிருஷ்ணன், அவரது மகன் திரு. சரவணன் என்பவர்கள் JRK Travels நடத்தி வருகிறார்கள். இந்த கடையை ஏலம் எடுத்தவர் வேறொரு நபர், சம்பந்தப்பட்ட திரு. இராமகிருஷ்ணன் மகன் திரு. சரவணன் இதற்கு முன் பேருந்து நிலையம் முகப்பில் பால் பூத் நடத்துவதாக கடையை எடுத்து கடையின் நிபந்தனை காலம் முடிந்து பல வருடம் கடைக்கு வாடகை செலுத்தப்படாமல் அந்த கடையின் அளவீடுகளை கூடுதலாக மாற்றி கட்டி அதன் ஒரு

பகுதியில் JRK Travels என்றும், மற்றொரு பகுதியை குத்தகைக்கு விட்டு இருந்ததை, மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரடியாக நடவடிக்கை எடுக்க செய்து பேரூராட்சியின் நிர்வாக அதிகாரி திருமதிமனோரஞ்சிதம் அவர்கள் கடையினை அப்புறப்படுத்தினார்கள்.

இதனை எதிர்த்து தவறான தகவல்களை மாண்பமை மதுரை கிளை, சென்னை உயர்நீதிமன்றத்தில் கொடுத்து பேரூராட்சி நிர்வாக அதிகாரி மற்றும் கோட்டாட்சியர், வட்டாட்சியர், காவல் துறையினர் மீது வழக்கு தொடுத்து அந்த வழக்கில் அனைவருக்கும் விடுதலை தீர்ப்பு வந்தது. மேலும் பேரூராட்சிக்கு தொடர்ந்து பல புகார்களை கொடுத்து தொடர்ந்து இவர்கள் இருவரும் மிரட்டி வந்தார்கள். வணிக வளாகத்தில் இவர்களுக்கு கடைகள் கொடுத்து, இவர்கள் இருவரும் பேரூராட்சிக்கு புகார் அனுப்பாமல் இருக்க இதுவரை வணிக வளாக கடைகளை ஏலம் விடாமல் தற்போது இருக்கின்ற நகராட்சி ஆணையாளரும் உடந்தையாக உள்ளார். குத்தகை காலம் முடிந்து பல வருடம் கடந்த நிலையில் அதனை மறு ஏலம் விடாமல் அரசிற்கு வருவாய் இழப்பீடு செய்த ஆணையாளர் மீது நடவடிக்கை எடுத்து மறு ஏலம் விடும்படி வேண்டுகிறேன்" என தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 03.04.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருச்செந்தூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

திருச்செந்தூர் நகராட்சி ஆணையாளர் தனது 18.04.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

"அரசாணை (நிலை) எண்.116, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 07.12.2021–ன்படி, திருச்செந்தூர் சிறப்பு நிலை பேரூராட்சி, நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 07.12.2021–ந் தேதி முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது.

மனுதாரரின் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள விவரப்படியான வணிக வளாகக் கடை எண்.2ஐ திருச்செந்தூர் சிறப்பு நிலை பேரூராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற 15.07.2020 ஆம் தேதிய ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளாததால், ஏல விதிகளின்படி, பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் அரசு மதிப்பை விட கூடுதலாக கோரியுள்ள திரு.என்.கார்த்திக் முத்துகிருஷ்ணன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்பட்டு 01.08.2020 ஆம் தேதி முதல், மூன்றாண்டு தொகுப்பு கால அளவில் ஒன்பது ஆண்டுகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு.என்.கார்த்திக் முத்து கிருஷ்ணன் என்பவரால் 2022 – 23 ஆம் ஆண்டு வரை வணிக வளாக கடை எண்.2–க்கு மாத வாடகை நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது என்ற விவரத்தினை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருச்செந்தூர் பேருந்து நிலையம் அருகிலுள்ள வணிக வளாகக் கடைகள் மிகவும் பழுதடைந்து உள்ள நிலையில், தற்போது நடைமுறையில் உள்ள ஏலம் முடிவுற்றவுடன் கட்டடம் இடிக்கப்பட்டு புதியதாக வணிக வளாகக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்ற விவரத்தினையும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் திருச்செந்தூர் நகராட்சி ஆணையரும் 19.04.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 11.04.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. J. எபிசேயூஸ் 19.04.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

"திருச்செந்தூர் பேருந்து நிலையம் அருகே உள்ள நகராட்சிக்குட்பட்ட வணிக வளாகக் கடைகளின் ஏல ஒப்பந்தம் கடந்த 2018ஆம் ஆண்டுடன் முடிவடைந்துள்ளது. தற்போது திருச்செந்தூர் நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்னரும் மேற்கண்ட 13 கடைகள் ஏலம் விடப்படாமல் உள்ளது. மேலும் அங்குள்ள கடைகளை பலர் உப குத்தகைக்கு (sub lease) எடுத்து நடத்தி வருகின்றனர். மேற்கண்ட திருச்செந்தூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகக் கடைகள் முறையாக ஏலம் விடப்படாததால் அரசிற்கு பெருத்த நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே குத்தகைக் காலம் முடிவுற்று பல ஆண்டுகள் ஆகியும் ஏலம் விடப்படாத கடைகளை கண்டறிந்து அவற்றை நகராட்சியால் ஏலம் விட தேவையான நடவடிக்கை எடுத்திடுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது 21.3.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான திருச்செந்தூர் நகராட்சி ஆணையாளர் திரு.நா.தி.வேலவன் 19.04.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்.

"திருச்செந்தூர் பேரூராட்சி கடந்த 7.12.2021 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மனுதாரர் குறிப்பிட்டுள்ள வணிக வளாகக் கடை எண். 2–க்கான ஏலம் 15.7.2020 அன்று நடைபெற்ற போது எவரும் கலந்துகொள்ளாத நிலையில், ஏல விதிகளின்படி அரசு மதிப்பை விட கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கோரியவருக்கு மூன்று ஆண்டு தொகுப்பு கால அளவில் 9 ஆண்டுகளுக்கு ஒப்பந்தம் அளிக்கப்பட்டது.

திருச்செந்தூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள வணிக வளாகக் கடைகள் மிகவும் பழதடைந்த நிலையில், தற்போது நடைமுறையில் உள்ள ஏலத்தின் காலம் முடிவடைந்தவுடன்

மேற்கண்ட வணிக வளாகக் கட்டடம் இடிக்கப்பட்டு புதிய வணிக வளாகம் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட வணிக வளாகம் புதுப்பிக்கப்படும் காலம் வரை அங்குள்ள 13 கடைகளுக்கு புதிதாக ஏலம் விட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், திருச்செந்தூர் நகராட்சி ஆணையாளர் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரைச் சேர்ந்த மனுதாரர் திரு. J. எபிசேயூஸ் என்பவர் தனது 21.03.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் திருச்செந்தூர் பேருந்து நிலையம் அருகேயுள்ள நகராட்சிக்குட்பட்ட வணிக வளாகக் கடைகள் 2018 ஆம் ஆண்டிற்கு பின்னர் மறு ஏலம் விடப்படாமல் இருப்பதாக புகாராக தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் பேரூராட்சியானது அரசாணை (நிலை) எண்.116 நகராட்சி நிர்வாகம் (மற்றும்) குடிநீர் வழங்கல் துறை, நாள் 07.12.2021–ல் நகராட்சியாக அரசு அறிவித்து வெளியிட்ட ஆணையின்படி, 07.12.2021 ஆம் தேதி முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. திருச்செந்தூர் பேரூராட்சியானது நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட பின்பும் 2018 ஆம் ஆண்டு முதல் நகராட்சிக்கு சொந்தமான, பேருந்து நிலையம் அருகேயுள்ள வணிக வளாகக் கடைகள் ஏலம் விடப்படவில்லை என மனுதாரர் புகாராக தெரிவிக்கும் கடை எண்.2 ஐ, திருச்செந்தூர் பேரூராட்சியில் ஏல / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வெளியிடப்பட்டும், 15.07.2020 அன்று நடைபெற்ற ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை என்பதால் பேரூராட்சியில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் அரசின் மதிப்பைவிட கூடுதல் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரர் திரு. என்.கார்த்திக் முத்துகிருஷ்ணன் என்பவருக்கு 01.08.2020 முதல் 3 ஆண்டுகள் தொகுப்பு கால அளவில் 9 ஆண்டுகளுக்கு கடை எண்.2 ஒப்படைக்கப்பட்டு ஒப்பந்ததாரர் தவறாமல் எவ்வித நிலுவையுமின்றி கடைக்கான மாத வாடகை செலுத்தி வருவதாக திருச்செந்தூர் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது. மேலும், பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள வணிக வளாகக் கடைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் தற்போது செயல்பாட்டில் உள்ள ஏலகாலம் முடிவு பெற்றவுடன் பழுதடைந்த வணிக வளாகக் கட்டடம் இடிக்கப்பட்டு, புதிதாக கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதும் நகராட்சி ஆணையாளரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேலும், பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள பழுதடைந்த வணிக வளாகத்தை புதுப்பிக்கும் காலம் வரையில் அவ்வளாகத்தில் அமைந்துள்ள 13 கடைகளுக்கு புதிதாக ஏலம் விடுவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் நகராட்சி ஆணையாளரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

திருச்செந்தூர் நகராட்சியால் பேருந்து நிலைய வணிக வளாகக் கட்டடங்கள் புதுப்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், ஏற்கனவே உள்ள 13 கடைகளுக்கு புதிதாக ஏலம் விடும் போது, வணிக வளாகக் கட்டடம் புதுப்பிக்கும் கால அளவினை நிர்ணயம் செய்து அந்த கால அளவிற்குள் கடைகளை ஏலம் விடுவதற்கு தற்போது நடைமுறையிலுள்ள ஏலம் தொடர்பான ஆணைகளை பின்பற்றி, நகராட்சி ஆணையாளர் நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டும். இவ்வாறு வணிகக் கட்டடங்களை புதுப்பிக்கும் கால அளவினை நிர்ணயம் செய்யாமல் ஏலம் விடப்பட்டால் குத்தகைதாரர்கள் உள் வாடகை (Sub-Rental) போன்ற முறைகேடான செயல்பாடுகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படுகிறது. இத்தகைய முறைகேடான செயல்கள் தவிர்க்கப்பட வேண்டும் எனவே கடைகளை ஏலம் எடுத்தவர்கள் உள்குத்தகைக்கு (sub lease) விடாமல் இருப்பதையும் உறுதி செய்திடுமாறும் திருச்செந்தூர் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

திருச்செந்தூர் நகராட்சிக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான கடைகளை நடைமுறையில் உள்ள விதிகளின்படி ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் குத்தகைக்கு விடுவதில் நகராட்சிக்கு எவ்வித நிதியிழப்பும் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்து உறுதி செய்திடுமாறும் திருச்செந்தூர் நகராட்சி ஆணையாளரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023 ஆம் ஆண்டு மே திங்கள் 04 –ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.J. எபிசேயூஸ்,
112B, தெற்கு புதுத் தெரு,
திருச்செந்தூர் – 628 215, தூத்துக்குடி மாவட்டம்.

2) ஆணையாளர், திருச்செந்தூர் நகராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளர்

05/05/23